DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-294/2022
Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.R.கார்த்திக் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

( A1 present. A2 to A11 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)
13.05.2024 –01.03 PM

சாட்சியை நிலைய முதல் நிலை பெண் காவலர்–936 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது திம்மநாதபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 2017ம் ஆண்டு பெருநாழி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். பெருநாழியில் உள்ள சர்வே எண்.241/1Bல் கண்ட ஆதிதிராவிடர் நலத்துறைக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிந்து பரமக்குடி சார் ஆட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்காக கடந்த 08.05.2017ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் நானும், சர்வேயர் திரு.காமேஸ்வரன், மண்டலத் துணை வட்டாட்சியர் திரு.வரதராஜன் அவர்கள், ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் திருமதி.இராஜேஸ்வரி ஆகியோருடன் பெருநாழி கிராமத்திற்கு சென்று மேற்படி சர்வே எண்ணில் கண்ட நிலத்தை அளவீடு செய்ய சென்ற எங்களை ஆட்டோவை விட்டு எங்களை இறங்கவிடவில்லை. ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்காக அளவீடு செய்ய முயற்சித்தபோதும் எங்களை பணி செய்யவிடாமல் தடுத்ததால் மேற்படி இடத்தை அளவீடு செய்வதற்காக மறுநாள் 09.05.2017ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் மேற்படி நிலத்தை அளவீடு செய்தோம். அதில் பாதை சம்மந்தமாக அளவீடு செய்தபோது அதிலிருந்த ஆக்கிரமிப்பை அகற்ற முயற்சித்தபோது ஆஜர் எதிரியுடன் இருந்த 11 நபர்கள் சேர்ந்து கொண்டு 12 பேரும் அங்கிருந்த

முள்வேலிக்குள் கை, கால்களை நுழைத்துக்கொண்டு மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு ஆக்கிரமிப்புக்களை அகற்றினால் நாங்களாகவே தீ வைத்துக் கொண்டு உங்கள் மீது பழியை போட்டுவிடுவோம் என்று மிரட்டினார்கள். பின்னர் சம்பவ இடத்திலிருந்த காவலர்களின் உதவியுடன் அவர்களை சம்பவ இடத்திலிருந்து அகற்றினோம். மீண்டும் எதிரிகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு பிரச்சனை செய்ததால் அவர்கள் மீது காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் அவர்களை கைது செய்த பின்பு நாங்கள் அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றினோம்.

3. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:- இல்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.